05.11.2025

O.S.No. 105/2021

PW1– முகம்மது அப்துல் அஜீஸ்– த/பெ. அசன் மைதீன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.11.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு பிளாட் எண் சரியாக தெரியாது, நான் வாங்கிய இடத்தின் புல எண்.280/3. மேற்படி புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 88 செண்ட். தபசில் இடத்தில் எத்தனை பிளாட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது என எனக்கு தெரியாது.

2. எனது இடம் எந்ததிசையில் உள்ளது என தெரியாது, பள்ளிவாசலுக்கு அடுத்து உள்ளது. நான் வாங்கிய இடத்தின் பிளாட்டுகளுக்கு பெயர் கிடையாது. நான் வாங்கிய இடத்திற்கு பிளாட் அப்ரூவல் உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

3. எனது பிளாட்டின் அருகில் உள்ள இடங்களும் எனது மனையின் அதே அளவுகளா அல்லது வேறு அளவுகளா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலப்பத்திரம் என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. எனது பிளாட் தற்போது காலியிடமாக தான் உள்ளது என்றால் சரிதான். எனது பிளாட்டின் வரைபட ஸ்கெட்ச் என் கைவசம் உள்ளது, அதை தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். எனது இடத்தின் மேற்கு எல்லையாக குறிப்பிட்டுள்ள பிளாட் எண்.4A உரிமையாளர் தாக்கல் செய்த

வழக்கு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குஅதுபற்றி தெரியாது.

5. நான் பிரதிவாதிகளின் கிரையப்பத்திரத்தை ரத்து செய்ய நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எனது பிளாட் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என தெரியாது, என் தாய்தான் வாங்கினார். எனது இடத்தை சுற்றி வேலி இல்லை என்றால் சரியல்ல, வேலி அமைத்துள்ளேன்.

6. நான் இந்த வழக்கில் கோரியுள்ள விளம்புகை, தடையாணை பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்து உள்பட 48 செண்ட் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது கிரையப்பத்திரத்தின்படி ஸ்தலத்தில் எனக்கு அனுபவமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.